## தொழில் முனைவோர்களாக மாற்றும் உன்னதத் திட்டத்தின் கீழ்

# தூய்மைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட நவீன வாகனங்களின் செயல்பாடுகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டார்!

சென்னை, ஜன.6-

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.1.2025) சென்னை, தேனாம்பேட்டை மண்டலம், சீதாம்மாள் சாலையில், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் தூய்மைப் பணியாளர்களை தொழில் முனைவோர்களாக மாற்றும் உன்னதத் திட்டத்தின் கீழ் தூய்மைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட நவீன கழிவுநீர் அகற்றும் வாகனங்களின் செயல்பாடுகளை பார்வையிட்டு, விவரங்களை கேட்டறிந்தார்.**

**தூய்மைப் பணியாளர்களை தொழில் முனைவோர்களாக மாற்றும் உன்னதத் திட்டத்தின் கீழ் நவீன கழிவுநீர் அகற்றும் வாகனங்கள் வழங்கும் திட்டம்**

கடந்த ஆண்டுகளில், மனித கழிவுகளை மனிதனே அகற்றும் அவல நிலையினை மாற்றி சென்னை பெருநகரில் உள்ள கழிவுநீர் அகற்றும் கட்டமைப்புகளின் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகளை சென்னை குடிநீர் வாரியம் தொடர்ந்து இயந்திரமயமாக்கியுள்ளது. இவ்வியந்திரங்களை இயக்குவதற்கும், கழிவுநீர் கட்டமைப்புகளை பராமரிப்பதற்கும் 728 நிரந்தர மற்றும் 1489 ஒப்பந்த பணியாளர்கள் மூலமாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்பணியாளர்கள் பல ஆண்டு காலமாக கழிவுநீர் கட்டமைப்புகளை பராமரிக்கும் பணியில் ஈடுப்பட்டு வருகிறார்கள். மேலும், இவர்களின் வாரிசுதாரர்களும் இதே பணியில் ஈடுப்பட்டுள்ளனர். இந்நிலையை மாற்றுவதற்கும் இவர்களின் வாழ்வதாரத்தை மேம்படுத்துவதற்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, சென்னை குடிநீர் வாரியம், தலித் இந்திய வர்த்தக மற்றும் தொழிற்சங்க அமைப்புடன் (DICCI) இணைந்து இவர்களை தொழில் முனைவோர்களாக மாற்ற உன்னதத் திட்டத்தினை செயல்படுத்த முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் 28.02.2023 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

**பணி நியமன ஆணைகள்!**

இதை தொடர்ந்து, சென்னை குடிநீர் வாரியம், நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் தூய்மைப் பணியின் போது உயிரிழந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களான 39 நபர்கள், 48 தூய்மைப் பணியாளர்கள் மற்றும் 126 வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள ஆதிதிராவிடர் /பழங்குடியினருக்கு முன்னுரிமை கொடுத்து, மொத்தம் 213 நபர்களுக்கு நவீன இயந்திரங்கள் வழங்கி இவர்களை தொழில் முனைவோர்களாக மேம்படுத்த 27.12.2023 அன்று பணி ஆணைகள் வழங்கப்பட்டது.

இவ்வகையான நவீன கழிவுநீரகற்று இயந்திரங்கள் பெறுவதற்காக அண்ணல் அம்பேத்கர் முன்னோடிகள் திட்டத்தின் கீழ் சிறப்பு நிகழ்வாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 50 விழுக்காடு மானியம் வழங்கி, மொத்தம் 213 நபர்களுக்கு கடன் உதவி மற்றும் மானியம், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 8.3.2024 அன்று வழங்கப்பட்டது.

சென்னை குடிநீர் வாரியத்தில் இத்திட்டத்தின் வாயிலாக பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு குறைந்தபட்ச வருமானமாக தலா 50 ஆயிரம் ரூபாய் என 7 ஆண்டுகளுக்கு உறுதிசெய்யப்படும். இப்பணிகளுக்காக 500 கோடியே 24 இலட்சம் ரூபாய் நிர்ணயித்துள்ளது. இதன் மூலம் இந்த குடும்பத்தினருக்கு நிரந்தர வருமானம் உறுதி செய்யப்பட்டு அவர்களுடைய வாழ்வாதாரத்தையும், சமுதாய கௌரவத்தையும் மேம்படுத்த இந்த சிறப்பு திட்டம் வழிவகுத்துள்ளது.

இப்பணியில் ஈடுபடவுள்ள பணியாளர்களுக்கு புதிய தொழில்நுட்ப இயந்திரங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் முறையான பயிற்சிகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

சென்னை குடிநீர் வாரியத்தில் பணிபுரியும் அனைத்து தூய்மைப் பணியாளர்களையும் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தில் உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம், திறன் மேம்பாட்டு பயிற்சி, தொழிற்கல்வி மற்றும் பயிற்சி கடன் திட்டம் போன்றவை தூய்மைப் பணியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சென்னை, ராஜரத்தினம் மைதானத்தில் 6.12.2024 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், முதலமைச்சர் அவர்கள் தூய்மைப் பணியாளர்களை தொழில் முனைவோர்களாக மாற்றும் உன்னதத் திட்டத்தின் கீழ், தூய்மைப் பணியாளர்களுக்கு 213 நவீன கழிவுநீர் அகற்றும் வாகனங்களை வழங்கிடும் முதற்கட்டமாக 100 தூய்மைப் பணியாளர்களுக்கு நவீன கழிவுநீர் அகற்றும் வாகனங்களை வழங்கினார்.

தூய்மைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட நவீன கழிவுநீர் அகற்றும் வாகனங்களின் செயல்பாடுகளை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் சென்னை, தேனாம்பேட்டை மண்டலம், சீதாம்மாள் சாலையில், தூய்மைப் பணியாளர்களை தொழில் முனைவோர்களாக மாற்றும் உன்னதத் திட்டத்தின் கீழ் தூய்மைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட நவீன கழிவுநீர் அகற்றும் வாகனங்களின் செயல்பாடுகளை பார்வையிட்டார். இயந்திர நுழைவாயில்களில் (Machine Hole) உள்ள கசடுகளை தூர்வாரும் இயந்திரத்தின் செயல்பாடுகள் மற்றும் கழிவுநீர் குழாய்களில் ஏற்படும் அடைப்புகள் மற்றும் படிந்துள்ள கசடுகளை நீக்கும் உயர்அழுத்த நீர்பாய்ச்சும் இயந்திரம் ஆகியவற்றின் செயல்பாடுகளை முதலமைச்சர் அவர்கள் ஆய்வு செய்த போது, அதனை தூய்மைப் பணியாளர்கள் இயக்கி காண்பித்தனர். பின்னர், அது தொடர்பான விவரங்களை தூய்மைப் பணியாளர்களிடம் கேட்டறிந்தார்.

அப்போது, முதலமைச்சர் அவர்கள் அத்தூய்மைப் பணியாளர்களிடம் இந்த நவீன கழிவுநீர் அகற்றும் வாகனங்களை கையாளத் தெரியுமா, அதற்கு உங்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதா என்றும், இவ்வாகனம் வாங்கிய பிறகு உங்களது வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளதா, எரிபொருள், பராமரிப்பு, வங்கி தவணைத் தொகை உள்ளிட்ட பல்வேறு செலவினங்கள் போக எவ்வளவு வருமானம் கிடைக்கிறது என்றும், வாகனம் பழுதடைந்தால் எவ்வாறு சீர் செய்கிறீர்கள் என்றும், இரவு நேரங்களில் பணியாற்றுவது தொடர்பாகவும் கேட்டறிந்தார்.

அதற்கு அத்தூய்மைப் பணியாளர்கள் தங்களுக்கு இவ்வாகனங்களை கையாள இரண்டு வாரங்கள் பயிற்சி அளிக்கப்பட்டது என்றும், இவ்வாகனம் 50 சதவிகித அரசு மானியத்துடன் வாங்கியுள்ளதால் எரிபொருள் உள்ளிட்ட பல்வேறு செலவினங்கள் போக மாதம் சுமார் 60 ஆயிரம் ரூபாய் முதல் 70 ஆயிரம் ரூபாய் வரை வருமானம் கிடைப்பதாகவும், இதனால் தங்கள் வாழ்வாதாரம் உயர்ந்துள்ளதாகவும், வாகனம் பழுது ஏற்படும் போது தலித் இந்திய வர்த்தக மற்றும் தொழிற்சங்கம் வாயிலாக புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ள நிறுவனத்திற்கு எடுத்துச் சென்று பழுதுகளை சீர் செய்து வருவதாகவும், வார இறுதி நாட்களில் சுழற்சி முறையில் இரவுப் பணி மேற்கொள்ளப்பட்டு அடுத்த நாள் எங்களுக்கு விடுப்பு வழங்கப்படும், அதனால் எங்களுக்கு இரவு நேரங்களில் பணியாற்றுவதில் சிரமம் ஏதுமில்லை. அத்துடன் போக்குவரத்து நெரிசலின்றி பணிகளை மேற்கொள்ள முடிவதாகவும் தெரிவித்தனர்.

மேலும், முதலமைச்சர் அவர்கள் அத்தூய்மைப் பணியாளர்களிடம் உங்களுக்கு பணி எவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்று கேட்டபோது, உரிய இடைவெளியில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளுதல், பொதுமக்களிடம் தொலைபேசி வாயிலாகவும், சென்னை குடிநீர் வாரியத்தின் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு அறையில் பெறப்படும் புகார்களின் அடிப்படையிலும் அலுவலர்களால் பணிகள் ஒதுக்கப்படுகிறது என்று தூய்மைப் பணியாளர்கள் தெரிவித்தனர். அப்போது, முதலமைச்சர் அவர்கள் தூய்மைப் பணியாளர்களின் பணியினை பாராட்டினார்.

இந்த நிகழ்வின்போது, சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, துணை மேயர் மு.மகேஷ் குமார், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர். தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி. ஜி.வினய் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

## குவைத்தில் "தி.மு.க. அயலக அணி குவைத் தளபதி பேரவை" சார்பில்,

# தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் "மூன்றாண்டுகள் சாதனை விளக்க மாநாடு"!

### கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி – துணை மேயர் ஜி.காமராஜ் சிறப்புரை!



குவைத், ஜன.6-

குவைத்தில் உள்ள தி.மு.க. அயலக அணி சார்பில், 03.01.2025 அன்று மாலை 5.00 மணியளவில் "தி.மு.க. அயலக அணி மற்றும் குவைத் தளபதி பேரவை" சார்பில் "புலம் பெயர்ந்தோர் நலன் காக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் "மூன்றாண்டுகள் சாதனை விளக்க மாநாடு" குவைத் தளபதி பேரவை அமைப்புச்செயலாளர் மேட்டுப்பட்டி அ. ராஜா முஹம்மது தலைமையேற்க கடியாவயல் கருப்பையா, காஜா மொஹைதீன், டேவிட், பிரசாந்த், அசோக் குமார், அமுதா மார்ட்டின், போஜன், சுப்பிரமணி, வெங்கடேசன், சரவணன், ராஜு ஆகியோர் முன்னிலை வகிக்க, மதுரை காளிதாசன் வரவேற்புரையாற்றிட நாசர் நூர் முகமது நன்றியுரையாற்றிட கவிஞர் வீட்டுக்கட்டி மஸ்தான், ராணிப்பேட்டை கிளாட்வின் பாக்கியராஜ் ஆகியோர் இம்மாநாட்டு நிகழ்ச்சிகளை தொகுப்பு வழங்கிட - மாணவர் அணிச்செயலாளர் எம்.ஆர். எம்.நபில்ராஜா நிகழ்ச்சி ஒருங்கிணைப்பில் குவைத், தஸ்மா டீச்சர் சொசைட்டியில் நடைபெற்றது.

இம்மாநாட்டில் தி.மு.க. தலைமைக் கழகத்தின் சார்பில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் ஜி.காமராஜ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

இம்மாநாட்டில் குவைத் அயலக அணி அமைப்பாளர் சிதம்பரம் தியாக ராஜன், ஜனாப் அபூபக்கர் சித்தீக், சுப்ரீம் கார்கோ அண்ட் ட்ராவல்ஸ் எதுமலை பாவாசா, அல் அவுதா சாதிக் பாஷா, கவிஞர் சம்சுதீன், வல்லம் அப்பாஸ், எரவாஞ்சேரி சாகுல் ஹமீது, கொடுந்துறை முகமது அலி, மற்றும் சாமி மங்களேஸ்வரன் சஜ்ஜாத் அலிகான் நூஹ் அலி அப்பாஸ் எஸ் எம் எல் குமார் இன்ஸ்பெக்டர், திருச்சி குமார் சிராஜுதீன் ஜனாப் பாய், ஆனந்த் சலூன் ஜம்ஜம் இப்ராஹிம் கே அய்யூப் பாய், டேஷ்டி ஏஎஸ் சிராஜுதீன் சிவக்குமார், பாலிவுட் சீனிவாசன் அல்ஹவுதா சஹீன் தாலிப் மற்றும் கழக முன்னோடிகள் இம்மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



புதுக்கோட்டை முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி மாவட்ட விளையாட்டரங்கத்தில், அறிஞர் அண்ணா மிதிவண்டிப் போட்டியினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி , மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. மு.அருணா தலைமையில் நேற்று முன்தினம் (04.01.2025) கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் து.செந்தில்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



நீலகிரி மாவட்ட தி.மு.க. சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு சார்பில் கிருஸ்துமஸ் விழா மாவட்டக் கழக அலுவலகம், உதகை கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட அமைப்பாளர் அன்வர் அப்துல்லா தலைமையில் நடைபெற்றது. மாவட்டக் கழகச் செயலாளர் பா.மு.முபாரக் கலந்து கொண்டு கேக் வெட்டி, சிறு குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கி அனைவருக்கும் கிருஸ்துமஸ் வாழ்த்துக்களை தெரிவித்தார். நிகழ்ச்சியில், மாவட்ட துணைச் செயலாளர் ரவிகுமார், மாவட்டப் பொருளாளர் நாசர் அலி, உதகை தெற்கு ஒன்றியச் செயலாளர் பரமசிவன், பொதுக்குழு உறுப்பினர் பில்லன், உதகை நகரமன்ற தலைவர் வாணீஸ்வரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ராஜா, காந்தல் ரவி, எல்கில் ரவி, ரஹமத்துல்லா, செல்வராஜ், மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு தலைவர் முபாரக், துணைத் தலைவர் ஜப்ருல்லா, துணை அமைப்பாளர்கள் மேத்யூஸ், சாதிக், செல்வராஜ், பாபுலால், கில்பர்ட், உதகை நகர துணைச் செயலாளர் ரீட்டாமேரி, நகர பொருளாளர் அனில்குமார், தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் ஜெயராமன், அணிகளின் துணை அமைப்பாளர்கள் நாகராஜ், ரமேஷ், கஜேந்திரன், ராஜ்குமார், கோபால், தியாகு, அமலநாதன், ராமன், ஆட்டோ பாபு, மார்கெட் ரவி, உதகை நகரமன்ற உறுப்பினர்கள் விஷ்னு, திவ்யா, உதகை தெற்கு ஒன்றிய துணைச் செயலாளர் ஈஸ்வரன், மாவட்ட பிரதிநிதி சத்தியநாதன், கழக நிர்வாகிகள் குண்டன், காளி, ஜெரி, பரமேஸ்வரி, மனோகரன் மற்றும் கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

---

## பொறுப்பேற்ற மூன்றரை ஆண்டுகளில்

# 2 லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கியுள்ளது திராவிட மாடல் அரசு!

## கோவையில் அமைச்சர் செந்தில் பாலாஜி பேச்சு!

கோவை, ஜன.6-

பொறுப்பேற்ற மூன்றரை ஆண்டுகளில் 2 லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கியுள்ள தமிழக அரசு என மேட்டுப்பாளையத்தில் நடைபெற்ற நலத்திட்ட விழாவில் அமைச்சர் செந்தில் பாலாஜி தெரிவித்தார்.

கோவை மாவட்டம், அன்னூர் குன்னத்தூர் ஊராட்சியில் ரூ.30 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய ஊராட்சி மன்ற கட்டிடத்தை மின்சாரம் மற்றும் மதுவிலக்கு, ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் செந்தில் பாலாஜி ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

அதனை தொடர்ந்து மேட்டுப்பாளையம் வட்டம் காரமடை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பெள்ளேபாளையம் ஊராட்சியில் ரூ.29.70 லட்சம் மதிப்பில் புதிய ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம், ரூ.60 லட்சம் மதிப்பில் எலகம்பாளையம் பகுதியில் புதிய நீருந்து நிலையம், ரூ.8 லட்சம் மதிப்பில் ராசடி ஏடி காலனி பகுதியில் சுகாதார வளாகம், ரூ.6.65 லட்சம் மதிப்பில் பெள்ளேபாளையம் ஜே.ஜே.நகர் பகுதியில் கான்கிரீட் சாலை மற்றும் வடிகால் என மொத்தமாக ரூ.1.04 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சி திட்ட பணிகள் நிறைவடைந்த நிலையில் இதனை தமிழக மின்சாரம் மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வு துறை அமைச்சர் செந்தில் பாலாஜி விழாவில் கலந்து கொண்டு துவக்கி வைத்தார்.

**சாலை மேம்பாட்டுக்கு ரூ.25 கோடி நிதி!**

இதே போல் சிக்காரம் பாளையம் ஊராட்சி கண்ணார்பாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ரூ.45 லட்சம் மதிப்பில் கட்டி கலையரங்கத்தை துவக்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து மக்கள் மத்தியில் பேசிய அமைச்சர் செந்தில் பாலாஜி "கடந்த பத்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் இரண்டு லட்சத்து இருபதாயிரம் மின் இணைப்புகள் மட்டுமே விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட நிலையில் தி.மு.க.வின் மூன்றாண்டு ஆட்சி காலத்திலேயே இரண்டு லட்சம் இலவச மின் இணைப்புகளை விவசாயிகளுக்கு வழங்கி உள்ளோம்.

மேலும் கோவை மாவட்டத்தின் கிராமப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்திற்காக ரூபாய் 25 கோடி நிதி ஒதுக்கி இம்மாவட்ட வளர்ச்சிக்கு தமிழக முதல்வர் சிறப்பு கவனம் செலுத்தி வருகிறார்" என்றார்.

தொடர்ந்து பெள்ளேபாளையம் ஊராட்சியில் கலைஞரின் கனவு இல்லம், ஊரக வீடுகள் பழுது பார்க்கும் திட்டம், பழங்குடியினர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்ட மற்றும் சீரமைக்கப்பட்ட வீடுகளை பயனாளிகளுக்கு அமைச்சர் வழங்கினார்.

அது தொடர்ந்து பகத்தூர் வள்ளி கும்மி நாட்டியக் குழுவினரின் கும்மி நடனம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிகளில் கோவை மாவட்ட ஆட்சித்தலைவர் கிராந்தி குமார், பாடி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தொ.அ. ரவி, குன்னத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் கீதா தங்கராஜ், அன்னூர் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் தனபால், பள்ளேபாளையம் ஊராட்சி தலைவர் பிரஸ் குமார், காரமடை கிழக்கு ஒன்றிய செயலாளர் எஸ். எம்.டி.கல்யாணசுந்தரம் ,ஒன்றிய கவுன்சிலர் அன்னூர் ஆனந்தன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பா.அருண்குமார், சி.ஆர்.ராமச்சந்தின், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி. ஆர்.சண்முகசுந்தரம், மேற்கு ஒன்றிய செயலாளர் சுரேந்திரன், கோவை மாவட்ட இந்து சமய அறநிலையத்துறை அறங்காவலர் குழு உறுப்பினர் கவிதா கல்யாண சுந்தரம், சிறுமுகை பேரூர் கழக செயலாளர் உதயகுமார், துணை செயலாளர் செந்தில்குமார், பெள்ளேபாளையம் ஊராட்சி மன்ற துணை தலைவர் சுரேந்திரன் தென்னை சிவா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




கோவை மாவட்டம், அன்னூர் குன்னத்தூர் ஊராட்சியில் ரூ 30 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய ஊராட்சி மன்ற கட்டிடத்தை மின்சாரம் மற்றும் மதுவிலக்கு, ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் செந்தில் பாலாஜி திறந்து வைத்தார். அதனை தொடர்ந்து மேட்டுப்பாளையம் வட்டம் காரமடை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பெள்ளேபாளையம் ஊராட்சியில் ரூ.29.70 லட்சம் மதிப்பில் புதிய ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம், ரூ.60 லட்சம் மதிப்பில் எலகம்பாளையம் பகுதியில் புதிய நீருந்து நிலையம் நலத்திட்ட உதவிகளை வழங்கியும் ரூ.8 லட்சம் மதிப்பில் ராசடி ஏடி காலனி பகுதியில் சுகாதார வளாகம், ரூ.6.65 லட்சம் மதிப்பில் பெள்ளேபாளையம் ஜே.ஜே.நகர் பகுதியில் கான்கிரீட் சாலை மற்றும் வடிகால் என மொத்தமாக ரூ.1.04 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சி திட்ட பணிகள் நிறைவடைந்த நிலையில் இதனை தமிழக மின்சாரம் மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வு துறை அமைச்சர் செந்தில் பாலாஜி துவக்கி வைத்தார்.